www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12T

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

வகுப்பு 12

தமிழ்

கால அளவு : 15 நிமிடம் + 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 14×1=14

1) தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?

அ) சீறி ஆ) கூவி இ) ஆடி ஈ) பாடி

2) உயர்ந்தோர் - இலக்கணக்குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) வினையாலணையும் பெயர்

இ) வினையெச்சம் ஈ) உரிச்சொற்றொடர்

3) மாறுபட்டதை எடுத்தெழுதுக.

அ) மனிதத் தீவுகள் ஆ) கசக்கும் இனிமை

இ) கனல் பூக்கள் ஈ) தொலைதூர வெளிச்சம்

4) 'உடுபதி' என்ற சொல்லின் பொருள்

அ) இராமன் ஆ) சந்திரன் இ) அமாவாசை ஈ) உறவினர்

5) பின்வரும் தொடர்களில் பொருள் முழுமையாக வெளிப்படும் தொடரை எடுத்தெழுதுக.

அ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.

ஆ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

இ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.

ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

6) "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தந்தை வழிச் சமூக முறை ஆ) தாய் வழிச் சமூக முறை

இ) விரிந்த குடும்ப முறை ஈ) தனிக்குடும்ப முறை

7) சீதாள பத்திரம் என்பது

அ) நெல் தாள் ஆ) கம்பந்தட்டை இ) தாழை மடல் ஈ) பனையோலை

8) 'படைப்புக்கலை' என்னும் நூலின் ஆசிரியர்

அ) அ.கி. பரந்தாமனார் ஆ) மு. சுதந்திரமுத்து

இ) கி.வா. ஜகந்நாதன் ஈ) சுந்தரராமசாமி

9) **கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

**காரணம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று தவறு, காரணம் சரி. ஆ) கூற்று சரி, காரணம் சரி.

இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் தவறு.

10) வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) சேய்மைக் காட்சித் துணிப்பு ஆ) காட்சி மறைவு

இ) அண்மைக் காட்சித் துணிப்பு ஈ) நடுக்காட்சித் துணிப்பு

11) அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?

அ) எண்ணியாங்கு எய்துபவர் ஆ) வாள்போல் பகைவர்

இ) தீயினத்தார் ஈ) மெய்ப்பொருள் காண்பவர்

12) அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

அ) பெருமிதம் ஆ) புகழ் இ) அச்சம் ஈ) நம்பிக்கை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13) 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) எஸ். ராமகிருஷ்ணன் ஆ) ஜெயமோகன்

இ) புதுமைப்பித்தன் ஈ) கு. அழகிரிசாமி

14) "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்

அ) இசைக்கருவி ஆ) வேளாண்கருவி

இ) தச்சுக்கருவி ஈ) போர்க்கருவி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15) வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை எவை?

16) முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

17) "ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

18) ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு வரைக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19) 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20) எழுத்தாணியின் வகைகளைக் குறிப்பிடுக.

21) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7×2=14

22) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

வூட்டாண்ட விளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

23) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**

நான் சுடுதண்ணீரில் குளித்தேன்.

24) **புணர்ச்சி விதி தருக:**

அருங்கானம் **(அல்லது)** ஒருமையுடன்

25) **பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

செய்த **(அல்லது)** வந்து

26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆ) படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனத்துடன் இருந்தால் அறிவை பெறலாம்.

27) **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

அ) ஆறஅமர

ஆ) வழிவழியாக

28) **ஏற்ற வினா அமைக்க:**

குடும்பம் என்ற சொல் முதல்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

29) எழுதும்போது ஏற்படும் பிழைகள் யாவை?

30) **கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் தருக:**

அ) Bibliography

ஆ) Stapler

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

31) குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

32) ''மூன்றான காலம் போல் ஒன்று'' - எவை? ஏன்? விளக்குக.

33) மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

34) கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

35) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

37) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

38) மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) 'எடுத்துக்காட்டு உவமையணியை' எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**(அல்லது)**

'பொருள் வேற்றுமை அணியைச்' சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக:**

**(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

**- நா. காமராசன்**

41) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**(அல்லது)**

ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

42) **தமிழாக்கம் தருக:**

A white women, about 50 years old, was seated next to a black man. Obviously distrubed by this, she called the airhostess, "Madam, what is the matter?" the hostess asked "you placed me next to a black man give me an alternative seat". The hostess replied went away and came back a few minutes later, madam, Just a I thought, there are no other available seats in the economy class.

43) **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை புனைக:**

'மழை' **(அல்லது)** 'வறுமை'

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக: 3×6=18

44) அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுடைமை வாழ்க்கையின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழிநின்று நிறுவுக.

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) ''ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46) அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலன்களை விவரிக்க.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47) அ) ''காய்நெல்.......'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) ''நன்று'' என முடியும் குறளை எழுதுக.

-----------

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com